15 மையங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு இலவசப் பயிற்சி அளித்து சாதனை

# அம்பேத்கர் கல்வி வேலைவாய்ப்பு மையத்திற்கு விருது

திருவில்லிபுத்தூர், அக்.13-

டாக்டர் அம்பேத்கர் கல்வி -வேலைவாய்ப்பு பயிற்சி மையத்தின் கல்விப்பணிகளைப் பாராட்டி, பல்வேறு அருந்ததிய அமைப்புகளின் கூட்டமைப்பான அருந்ததியர் ஒருங்கிணைப்புக்குழு, ராவ் சாகிப் எல்.சி.குருசாமி நினைவு விருது வழங்கியுள்ளது.

தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் ஒரு அங்கமாக செயல்பட்டு வரும் டாக்டர் அம்பேத்கர் கல்வி வேலைவாய்ப்பு மையம் சென்னை, கோவை, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், ஸ்ரீவில்லிபுத்தூர், திருச்செங்கோடு, மன்னார்குடி, கும்பகோணம், புதுக்கோட்டை, சிவகங்கை, ஆகிய இடங்களில் துவங்கப்பட்டு இயங்கி வருகிறது. வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் இந்த வாரத்திலேயே மையங்கள் துவங்குகின்றன. தற்போது வங்கித் தேர்வுக்கான கட்டணமில்லா வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இந்த மையங்களுக்கு வினாத்தாள் உள்ளிட்ட பல்வேறு ஆதாரங்களை திரட்டித் தரும் நோக்கத்தில் சேலத்தை மையமாகக் கொண்டு இயங்கும் அம்பேத்கர் ஆதார மையம் அக்டோபர் 11 அன்று துவக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு வங்கி, காவல்துறை, வி.ஏ.ஓ, அரசு ஊழியர் என்று பலதுறைகளில் இந்த மையத்தில் பயின்றவர்கள் வேலையில் அமர்ந்துள்ளனர். ஐ.ஏ.எஸ். தேர்வுக்கான முதல் கட்டத் தேர்வில் இம்மையத்தின் ஜெகன்னாதன் தேர்வு பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

முழுமையாக அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஒரே வங்கி என்று சொல்லப்படும் ரெப்கோ வங்கி, தாயகம் திரும்பியோருக்கான சிறப்பு வகுப்புகளை எடுக்க முடிவு செய்தது. அதை டாக்டர் அம்பேத்கர் கல்வி வேலைவாய்ப்பு பயிற்சி மையம் செய்ய வேண்டும் என்று அந்த வங்கி எடுத்த முடிவு, மையத்திற்கு கிடைத்த அங்கீகாரமாகும். அந்த பயிற்சி வகுப்பில் பங்கேற்ற மூன்று பேர் தேர்வில் வெற்றி பெற்றனர்.

இத்தகைய வெற்றிகளோடு, தற்போது மாநிலத்தில் சுமார் 15 மையங்களில் வங்கித் தேர்வுக்கான வகுப்புகளை மையம் நடத்திக் கொண்டிருக்கிறது. ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்த மையங்களில் பயின்று கொண்டிருக்கிறார்கள். இதில் சுமார் 100 ஆசிரியர்கள் தங்கள் பங்களிப்பை செலுத்தி வருகிறார்கள். சேலத்தில் துவங்கப்பட்டுள்ள அம்பேத்கர் ஆதார மையத்தில் கேள்வித்தாள்களைத் தயாரிப்பதற்காக 46 பங்களிப்பாளர்கள் இசைவு தெரிவித்துள்ளனர்.

இத்தகைய பணிகளை அங்கீகரிக்கும் வகையில்தான் அருந்ததியர் ஒருங்கிணைப்புக்குழு, ராவ் சாகிப் எல்.சி. குருசாமி நினைவு விருதை வழங்கியுள்ளது.




அண்மையில் திருவில்லிபுத்தூரில் நடைபெற்ற அருந்ததியர் கலைவிழாவில் இந்த விருதை ஆதித் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் நாகராசன் வழங்க, மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் கணேஷ் பெற்றுக் கொண்டார்.